12.06.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.33

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | | |
| த/பெ | மாணிக்கம் | | |
| கிராமம் | கரசானூர் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | வானூர் | வயது | 35/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 12.06.2025. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 07-05-2014 ம் தேதி மாலை திருச்சி போவதற்காக விழுப்புரம் ரயில்வே நிலையத்திற்கு ரயில் ஏற நான் வந்தேன். அந்த சமயத்தில் அங்கு கும்பலாக இருந்தது. அங்கு சுமார் 40 பேர் நின்று கொண்டிருந்தார்கள். போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அங்கிருந்த போலீஸ்காரர்கள் யாராவது நீதி மன்றத்தில் உள்ளார்களா என்றால், சாட்சி எதிரிகளை பார்த்து யாரும் இல்லை என்று தெரிவித்தார். ரயில் நிலையத்தில் உள்ள வாழைத்தோப்பில் இருந்து ஒரு பர்ஸை எடுத்தார்கள். அதை திறந்து பார்த்தார்கள்.அதில் 100 ரூபாய் நோட்டு நான்கும், பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தும் இருந்தன. இது சம்பந்தமாக சாட்சி சொல்கிறீர்களா என்று என்னை அங்கு இருந்த ஒரு போலீசார் கேட்டார். நான் சொல்கிறேன் என்று சொன்னேன். இந்த சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாட்கள்

என்று சரியாக ஞாபகம் இல்லை ஆனால் விழுப்புரத்தில் ஒரு ஜட்ஜ் எங்களை விசாரணை செய்தார். அவரிடம் மேற்படி விவரங்களை சொல்லிக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஜட்ஜிடம் கொடுத்த வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ. 26 ஆகும். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் லாரி, பொக்லைன் வைத்து தொழில் செய்து வந்தேன் என்றும், கடந்த 2011 ஆம் ஆண்டு எங்கள் காவல் நிலையம் ஆகிய வானூரில் திருக்குமரன் என்ற போலீசார் டிரைவராக வேலை செய்து வந்தார் என்றும், அவர் எனக்கு பழக்கம் என்றும், அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் கடந்த 07-05-2014 மாலை என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார் என்றும், விழுப்புரம் ரயில்வே காவல் நிலையத்தில் ஒரு திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட ஜெயவேல் என்ற ஆண் நபர் இறந்து விட்டதாகவும், அந்த போலீசார் திருக்குமரனுக்கும், ஆய்வாளருக்கும் பணிக்கு பிரச்சனை வந்துவிட்டது என்றும், என்னை அவருக்கு உதவி செய்ய கேட்டுக் கொண்டார் என்றும், அதில் காவல் நிலையம் வரும்படியும் அங்கு சொல்லிக் கொடுப்பதை சொல்லும்படி கேட்டுக் கொண்டார் என்றும், அதன் பிறகு கடந்த 09-05-2014 ஆம் தேதி நான் ரயில்வே காவல் நிலையம் சென்றேன் என்றும், அங்கு இருந்த ஆய்வாளர் கடந்த 07-05-2014 ம் தேதி நான் ரயில்வே நிலையம் என் நண்பர் செல்வா என்பவரை சந்திக்க திருச்சிக்குப் போக ரயில்வே நிலையத்திற்கு வந்து திருச்சி டிக்கெட் வாங்கியதாகவும், அப்போது ஒன்றாவது பிளாட்பாரத்தில் வந்து நின்று கொண்டிருந்ததாகவும், அங்கு 20 நபர்கள் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள் என்றும், நான் அங்கு சென்று பார்த்ததாகவும், மூன்று போலீசார் கருப்பு நிற பர்ஸ் ஒன்றை எடுத்தனர் என்றும், இது சம்பந்தமாக ஜட்ஜ் ஒருவர் விசாரிப்பார் அவரிடமும் மேற்படி நான் சொன்ன விவரங்களை சொல்லும்படியும் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள் என்றும், அவ்வாறே போலீஸ், ஜட்ஜ் விசாரணை செய்தபோது சொன்னேன் என்றும், ஆனால் உண்மையில் எனக்கு இது சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், பர்சை கைப்பற்றியதை நான் பார்க்கவில்லை என்றும், திருக்குமரன் போலீசார் கேட்டுக் கொண்டதால் பொய்யான

ஒரு வாக்குமூலத்தை போலீசிடமும், ஜட்ஜ் இடமும் சொன்னேன் என்று வேலூர் சி.பி.சி.ஐ.டி ஆய்வாளர் எனை விசாரித்த போது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**